**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.70 of 2026 |
| Prosecution Witness | : | PW2 |
| 19.05.2026 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : முருகேசன் | Calling | : | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father Name | : அவினாசி | | : | |
| Village | : மகேந்திரமங்கலம் | Age | : | 51 |
| Taluk | : தொட்டியம் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை–</u>**

நான் தற்போது தா.பேட்டை காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாகிய உதவி ஆய்வாளர் கலைச்செல்வன் என்பவர் வேறு அலுவலில் சென்றிருப்பதால் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி நீதிமன்ற அனுமதி பெற்று அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு கோப்பினை பார்த்து அவருக்காக நிலைய பொறுப்பு அதிகாரியான நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.01.2026 ம் தேதி தா.பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த கலைச்செல்வன் என்பவர் காவலர்கள் அமுதவள்ளி மற்றும் பிரபாகரன் ஆகியோருடன் தா.பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தா.பேட்டை, பெருகனூர் ஆகிய பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மகாதேவி எதிரியின் வீட்டின் பின்புறம் சென்று கண்காணித்தபோது, போலீசாரை பார்த்ததும் ஓட முயற்சித்த நபரை பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் வள்ளியம்மை, க/பெ.மருதமுத்து,

பள்ளர்தெரு, மகாதேவி, முசிறி, திருச்சி என்பவர் அரசு அனுமதியின்றி 180 எம்.எல் அளவு கொண்ட Express பிராந்தி 26 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருப்பதாக சொன்னவரை காரணம் கூறி மாலை 16.40 மணியளவில் கைது செய்தும், அவரது வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த 180 எம்.எல். அளவு கொண்ட Express பிராந்தி பெயர் கொண்ட 26 பிராந்தி பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்ததை கைப்பற்றுவதற்கு பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன் வராததால் உதவி ஆய்வாளருடன் பணியிலிருந்த மேற்கண்ட காவலர்கள் முன்னிலையில் மகஜரில் 16.50 மணிக்கு கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு கைப்பற்றிய மது பாட்டில்களை அதே இடத்தில் அழித்தல் மகஜர் தயார் செய்து மேற்கண்ட காவலர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் கொட்டி அழித்து மேற்கண்ட காவலர்களிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **அழித்தல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரி மீது தா.பேட்டை காவல் நிலைய குற்ற எண்.06/2026 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு காவலர்கள் அமுதவள்ளி, பிரபாகரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். இத்துடன் அவரது விசாரணை முடித்து எதிரி மீது 09.01.2026 அன்று சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

சம்பவ சமயத்தில் நான் வேறு ஒரு காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் இல்லை. இதே காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். சம்பவத்தின் போது நான் ரோந்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தனி நபரோ அல்லது கிராம நிர்வாக அலுவலரோ புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் தனிநபர் யாரையும்

சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மது பாட்டில்கள் எங்கிருந்து யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பதை பொறுத்து குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் என்னிடம் உள்ள ஆவணங்களில் அதனைப்பற்றி எதுவும் குறிப்பாக சொல்லவில்லை. சம்பவ இடத்தில் போட்டோ எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் என்னிடம் உள்ள ஆவணங்களில் போட்டோ எதுவும் இல்லை. மேற்படி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மது பாட்டில்களை அதே இடத்தில் கொட்டி அழிக்கும்போது போட்டோ எதுவும் எடுக்கவில்லை என்றால் என்னிடம் உள்ள ஆவணங்களில் போட்டோ எதுவும் இல்லை. இவ்வழக்கில் அழிக்கப்பட்ட மது பாட்டில்கள் மற்றும் மூடிகளை சான்றுப்பொருளாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மதுபாட்டில்களில் இருந்த மதுவை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் உள்ள கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று சொன்னால் தட்டச்சு செய்யப்பட்டது தான். ஆனால் காவல் நிலையத்தில் செய்யப்படவில்லை. சம்பவ இடத்தில் வைத்து செய்யப்பட்டது. இவ்வழக்கு காவல் நிலைய புள்ளி விவரக்கணக்கிற்காக மேலதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் எதிரிக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சொன்ன நேரம் மற்றும் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடமிருந்து எவ்வித மது பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/-R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.